2007 ஜனவரி 25]

(அ) திருப்போரூர் தொகுதி, மறைமலை நகர் நகராட்சி, 18-வது வார்டு, கொருக்கன்தாங்கல் பகுதியில் குழந்தைகள் நலக் காப்பகம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் 250 குழந்தைகள் ஒப்பளிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் ஓர் அரசு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் மேலும் அரசு குழந்தைகள் காப்பகம் ஒன்று நிறுவ வேண்டிய அளவிற்குக் கோரிக்கைகள் இல்லை. இந்நிலையில் திருப்போரூர் தொகுதி, மறைமலை நகராட்சிப் பகுதியில் அரசினால் குழந்தைகள் காப்பகம் நடத்த வாய்ப்புகள் ஏதும் இல்லை.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதி, மறைமலை நகர், 18-வது வார்டு, கொருக்கன்தாங்கல் பகுதியில் வசிக்கும் ஏழையெளிய மக்கள் குடும்பச் சூழ்நிலை காரணமாக, வேலை தேடி வெளியிடங்களுக்குச் சென்று வர கால நேரம் ஆகின்ற காரணத்தினால், அவர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க, அரசு குழந்தைகள் நலக் காப்பகம் அமைத்துத் தந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதை அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனுவாக என்னிடம் தரச் சொல்லுங்கள். பரிசீலித்து உரிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, திரு. ந. கணபதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

37—

கால்நடை மருத்துவமனை

***3433—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

திரு. எல்.பி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சத்தியமங்கலம் தொகுதி, சத்தியமங்கலம் ஒன்றியத்தில் குத்தியலத்தூர், மாக்கம்பாளையம், குன்றி, திங்களூர், கெர்மலம் ஆகிய ஊராட்சிகள் முற்றிலும் மலைப் பகுதியை உள்ளடக்கிய அதிக பரப்பளவு கொண்ட பகுதியாகும். இந்த மலைப் பகுதியில் ஒரு மையப் பகுதியைத் தேர்ந்தெடுத்து ஒரு முழுநேர கால்நடை மருத்துவமனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இந்த வேண்டுகோளை ஏற்று கேட்பதையும், கேட்காததையும் கொடுக்கும் நமது கலைஞர் அரசு நிறைவேற்றிக் கொடுக்குமா எனத் தங்கள்மூலமாக அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, அந்தப் பகுதியில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் இருப்பின், அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய கால்நடை மருந்தகம் அமைக்க, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY 600 009
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS